**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

CC.No.59/2023

தேதி: 26.02.2025

**<u>அ.சா.1 – இந்திராணி, த/பெ.சீரங்ககண்டர்</u>**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. நான் திருமணம் ஆகாதாவர். நான் என் அக்கா அ.சா.2 ஜானகி உடன் வசித்து வருகிறேன். நானும், என் அக்காவும் பிறந்தது நத்தமேடு. வளர்ந்தது எல்லாம் நாமக்கல் மாவட்டம் குச்சிபாளையம் ஆகும். ஆதரவற்றோருக்கான உதவி தொகையை நான் குச்சிபாளையத்தில் பெற்றிருந்தாலும், இங்கும் பெற்று கொள்வேன். ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டை ஆகியவற்றில் குச்சிபாளையம் முகவரி தான் நாளது தேதி வரை உள்ளது. சம்பவ இடமான நத்தமேட்டில் குடியிருப்பதற்கு ஆவணம் எதுவுமில்லை. சம்பவ இடமான பம்புசெட் அமைந்துள்ள இடம் எந்த சர்வே எண்ணில் உள்ளது என தெரியாது.

2. ஜெகதீசன் சம்பவ இடம் சம்பந்தமாக சொத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். எதிரி மல்லிகா என் மீது சொத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நாங்கள் குடியிருக்கும் வீட்டின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். எதிரி வீட்டின் மீது மட்டுமல்லாமல், மற்ற இடங்கள், சம்பவம் நடந்த பம்புசெட் இடம் அனைத்திற்கும் நாங்கள் உள்ளே நுழையக்கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தடையுத்தரவில் நானும், ஜானகி அம்மாவும் தனியாக வழக்கறிஞர் வைத்து நடத்துகிறோம் என்றால் ஜெகதீஸ் தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கில் நான் பிரதிவாதி.

3. அந்த வழக்கில் தடையுத்தரவு உள்ள விவரம் தெரியுமா என்றால் ஜெகதீஸை கேட்டால் தெரியும். இந்நீதிமன்ற அ.வ.எண்.22/2022 ல் நானும், அ.சா.2 ஜானகியும் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் ஆவோம். அந்த வழக்கில் 15.06.2022 ம்தேதி நாங்கள் சம்பந்தப்பட்ட இடங்களுக்குள் அத்துமீறி உள்ளே நுழையக்கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. **கிருஷ்ணராயபுரம், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற அ.வ.எண்.22/2022 ல் இ.ம.எண்.02/2022 ன் உத்தரவு மற்றும் உத்தரவாணை சான்றிட்ட நகல் எ.சா.ஆ.1 மற்றும் எ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. மேற்படி உத்தரவானது 15.06.2022 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட நிலையில், மேற்படி உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்தோமா என்றால் ஜெகதீஸை

கேட்டால் தான் தெரியும். நானோ, எனது தரப்பினரோ இடைக்கால மனுவில் மேல்முறையீடு செய்து, மேற்படி உத்தரவை நீக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் ஜெகதீஸை கேட்டால் தான் தெரியும். ஜெகதீஸன் எதிரிகள் மீது குளித்தலை நீதிமன்றத்தில் பாகபிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் ஜெகதீஸை கேட்டால் தான் தெரியும்.

5. எங்கள் ஊரில் தினமும் இரவு 10.00 மணியளவில் மின்இணைப்பு துண்டிக்கப்படும் என்றால் நான் மின்சாரம் இல்லாத காட்டில் வசித்து வருகிறேன். தெருவிளக்கு இல்லை. சாட்சி தன்னிச்சையாக தோட்டத்தில் தொகுப்பு வீட்டில் வசித்து வருகிறேன் என சாட்சியமளிக்கிறார். நான் தொகுப்பு வீட்டில் வசிப்பதற்கு எதாவது ஆவணம் உள்ளதா என்றால் என் பெயரில் இல்லை. கூட்டாக வசித்து வருகிறோம். எனக்கு வெட்டு காயம் ஏற்பட்டது. பிளேடில் கிழித்தால் கூட காயம்பட்ட இடத்தில் தழும்பு இருக்கும் என்றால் முள் கிழித்தால்கூட தழும்பு இருக்கும். தழும்பை காட்டுங்கள் என்றால் சாட்சி வலதுபக்க முட்டியை காட்டுகிறார். முட்டிக்குமேல் எலும்பு தூக்கி கொண்டு உள்ளது. அந்த இடம் கருப்பாக உள்ளது.

6. 12.03.2023ம் தேதி ராஜ் ஆர்த்தோ மருத்துவமனைக்கு இரவு சுமார் 10.30 மணிக்கு மேல் சென்றோம். மருத்துவமனையில் எக்ஸ்ரே எடுத்தனர். மருத்துவனையில் அடையாளம் தெரிந்த 4 நபர்கள் மிளகாய் பொடி தூவியும், கீழே தள்ளியும், அரிவாளால் வெட்டியதால் ஏற்பட்ட காயம் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அவ்வாறு புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ, முதல்விசாரணையிலோ மிளகாய் பொடி தூவியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். ஜெகதீசன் இருந்ததால் சிறிய காயத்துடன் தப்பிவிட்டது என்றும், ஜெகதீசன் இல்லை என்றால் பெரிய காயம் ஏற்பட்டிருக்கும் என்றால் ஜெகதீசன் அங்கு இல்லை. நானும், எனது அக்காவும் தான் இருந்தோம்.

7. ஜெகதீசன் அந்த இடத்தில் இருந்தார் என்றும், அவர் தான் எதிரிகளை அடித்து, எதிரிகளுக்கு காயத்தை ஏற்படுத்தினார் என்றும், அதை மறைப்பதற்காக ஜெகதீசன் அந்த இடத்தில் இல்லாதது போல் காட்டி, பொய்யாக எதிரிகள் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அக்கா மகன் ஜெகதீசன் இவ்வழக்கின் எதிரிகள் மூவர் மற்றும் சாவித்ரி என்பவர் மீது பாகபிரிவினை வழக்கினை குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.186/2020ல் தாக்கல் செய்து அந்த வழக்கானது 10.04.2023 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றும்,

எனக்கு பிரச்சினை நடந்த இடத்தில் எவ்வித உரிமையும் இல்லாமல், சொத்தை அபகரிக்கவே சம்பவ நாள் அன்று எதிரிகளை நான் தாக்கிவிட்டு, அந்த குற்றத்திலிருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது இவ்வாறான பொய்யான சங்கதிகளை கால்துறையினர் உதவியுடன் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

8. சம்பவ இடமாக சொல்லப்படும் இடமானது சர்வே எண்.64/1A1 ல் மற்றும் 6 சொத்துகள் சம்பந்தமாக இந்த நீதிமன்றத்தில் 05.04.2022 அன்றே உறுத்துகட்டளை வழக்கு தாக்கல் செய்து 15.06.2022 அன்று எங்களுக்கு எதிராக 3 எதிரிகளும் தடை உத்தரவு பெற்று, அந்த தடை உத்தரவானது இதுநாள் வரை எந்த நீதிமன்றத்தாலும் மாற்றி அமைக்காமல் உள்ள பட்சத்தில் நான் தடை உத்தரவை மீறி எதிரிகள் மீது தாக்குதல் நடத்திய குற்றத்தை மறைப்பதற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9. இந்த சம்பவம் முற்றிலும் பொய் என்பதனாலும், நாங்கள் எதிரிகள் மீது செய்த குற்றத்தை மறைப்பதற்காகவும் ஜோடிக்கப்பட்ட பொய்யான வழக்கு என்பதால் தான் எங்கள் முதல் விசாரணைக்கும், முதல் தகவல் அறிக்கை மற்றும் போலீசார் விசாரணையில் உள்ள சங்கதியில் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. தடை உத்தரவு பெற்ற இடத்தில், நான், ஜெகதீசன், மேனகா, ஜானகி அனைவரும் சேர்ந்து 1 மற்றும் 2 எதிரிகளை குச்சி, இரும்பு கம்பி மற்றும் கம்புகளால் தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தி அந்த கொடுங்காயத்திற்கு, 1 மற்றும் 2 எதிரிகள் 20 நாட்களுக்கு மேல் மருத்துவமனையில் இருந்து எங்கள் மீது புகார் கொடுத்து குற்ற எண்.92/2023 பதிவு செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/– M.Santhosham,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.